## செய்தி வெளியீடு

**நாள் 18.07.2019**

**மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களின் தலைமையில் அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

இன்று (18.07.2019) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களின் தலைமையில் அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை உறுப்பினர் செயலர் திரு சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சிறப்புக்குரிய துறையாகும். இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதும், அவர்களுடைய உடல்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கும், இளைஞர்களை நல்வழிப்படுத்துவதும், ஒரு குறிக்கோளுடன் வாழவைப்பதும் விளையாட்டுத் துறையாகும். அத்தகைய சிறப்புக்குரிய விளையாட்டினை மேம்படுத்துவது குறித்து, தக்க ஆலோசனை வழங்குவதற்கும், உங்களுடைய களத்தில் உங்களுடைய தேவை என்ன என்பது குறித்து தெரிந்து கொள்வதற்கும், அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விளையாட்டின் முக்கியத்துவம் கருதி, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில் தமிழ்நாடு விளையாட்டுப் பல்கலைக் கழகத்தினை 2004–ஆம் ஆண்டு அமைத்தார். அதேபோல், ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தினை மிகக்குறைந்த காலத்தில் கட்டி

இந்தியாவும், உலக நாடுகளும் வியக்கும் வண்ணம் அமைத்துத் தந்தார். இதேபோல், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடத்திக் காட்டினார். சர்வதேச அளவில் வெற்றிபெறும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அதிக அளவில் ஊக்கத் தொகை வழங்கி சிறப்பித்தார். இதை ஏன் சொல்கிறேன் என்றால், இளைஞர் சமுதாயம் சிறப்பாக இருந்தால், அந்த நாடு சிறப்புப் பெற்ற நாடாக இருக்கும் என்பதை என்னித்தான் விளையாட்டிற்கு அதிக முக்கியத்துவத்தை புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த தமிழக அரசு விளையாட்டினை மேலும் ஊக்கப்படுத்தும் வகையிலும், விளையாட்டில் ஈடுபடுகின்ற வீரர், வீராங்கனைகளுக்கு நம்பிக்கை ஏற்படுத்துகின்ற வகையில் அரசு வேலைவாய்ப்பில் 3 சதவிகிதம் வழங்கப்படும் என்ற பொன்னான அறிவிப்பை அறிவித்து, முதற்கட்டமாக மூன்று நபர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பு ஆணையினை வழங்கினார்கள். மேலும், விளையாட்டினை எந்தெந்த வகையில் ஊக்கப்படுத்தலாம் என்பதற்கு தமிழக அரசு 25 நபர்கள் கொண்ட ஆலோசனைக்குழு அமைத்துள்ளது. இவர்கள் வழங்கி வருகிற ஆலோசனைகளையும் அரசு பரிசீலித்து வருகிறது. கிராமங்களில் உள்ள இளைஞர்களின் ஆரோக்கியத்தையும், மனவளத்தை மேம்படுத்தவும், கூட்டு மனப்பான்மை உருவாக்கவும், இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கவும், அதை வெளிக்கொணரவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டத்தினை" அறிவித்து இதற்கு ரூ.64.35 கோடி ஒதுக்கியுள்ளார்கள்.

12,524 ஊராட்சிகளிலும், 500—க்கு மேற்பட்ட பேரூராட்சிகளிலும், இருபாலருக்கும் "அம்மா இளைஞர் விளையாட்டுக்குழு" இத்திட்டத்தில் அமைக்க வேண்டும். இதற்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்கள் முழு ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ், ஏதேனும் மூன்று விளையாட்டுக்களை தேர்ந்தெடுத்தல், இடத்தினை தேர்வு செய்தல், அதை ஒழுங்குப்படுத்துதல், அவர்களுக்கு பயிற்சி அளித்தல், அவர்களுக்கு சாதனங்கள் வழங்குதல், மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்பு பெறுதல் போன்று பல்வேறு

தொடர்புடைய பணிகளை நீங்கள் செய்ய வேண்டும். அரசின் மூலம் மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படும்.

எனவே, இங்கு வந்திருக்கின்ற அலுவலர்கள், இத்திட்டம் கிராம அளவில் சென்று கிராம இளைஞர்களுக்கு ஊக்கத்தை வழங்குவதற்கும், சிறந்த இளைஞர்களை உருவாக்குவதற்கும், தங்களுடைய ஒத்துழைப்பினை நல்குமாறு கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முதன்மை நிர்வாக அலுவலர் திரு சீ. அசோக்குமார், துணைப் பொது மேலாளர், திரு பா. சாமுவேல் ராஜா டேனியல், முதுநிலை மேலாளர் திரு கே. சேவியர் ஜோதி சற்குணம், மேலாளர் திரு ஜெ. மெர்சி ரெஜினா, அலுவலர்கள் மற்றும் அனைத்து மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு:- இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு),
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,
சென்னை.